**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.697/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பென்சிலா | க–பெ | ஆரோக்கியராஜ் |
| ஊர்: | : | கோவனி | | |
| வயது: | : | 41/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | ராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2025**

**1 ம் எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் கோவனி, இராநாதபுரம் மாவட்டத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது இரண்டாவது கணவர். என்னுடைய முதல் திருமணம் விவாகரத்து ஆகிவிட்டது. இந்த விவரத்தை சொல்லி ஆஜர் எதிரி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு தெரியப்படுத்தி 29.05.2015 அன்று செஞ்சை புனித தெரசா ஆலயத்தில் ஆஜர் எதிரிக்கும் எனக்கும் கிருஸ்தவ முறைபடி திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது எனது பெற்றோர் 60 பவுன் நகைகள் மற்றும் எனது கணவருக்கு 11 பவுன் தங்க நகைகள், பணம் ரொக்கமாக ரூ.4,50,000 வரதச்சனையாக கொடுத்தார்கள். திருமணத்திற்கு பிறகு மேற்படி பெற்றோர் எனக்கு அளித்த 60 பவுன் மற்றும் எனது கணவருக்கு கொடுத்த 11 பவுன் மற்றும் 4,50,000 ரூபாய் பணம் ஆகியவற்றை எனது மாமியார் மைக்கேல் அம்மாள் வசம் எனது கணவர் ஒப்படைத்தார். அதனை வாங்கி கொண்ட எனது மாமியார் ஆவணத்தில் கையெழுத்து போட்டார். எனது கணவர் ஆரோக்கியராஜ் சவுதி அரேபியாவில் மாதம் ரூ.40000 சம்பளத்தில் வேலை பார்த்து வருவதாகவும், திருமணம் முடிந்தவுடன் என்னையும் சவுதிக்கு அழைத்து செல்வதாக கூறி திருமணம் செய்தார். திருமணத்திற்கு பிறகு எனது மாமியார் வாடகைக்கு குடியிருந்த வீட்டில் கூட்டு குடும்பமாக குடியிருந்து வந்தோம். 2015 ம் வருடம் ஜுன் மாதம் எனது கணவர் மற்றும் அவருடைய அம்மா எனது நாத்தனார் மற்றும் கொழுந்தனார் உள்ளிட்டோர் பக்கத்து தெருவில் 18 லட்சம் ரூபாய்கு வீடு ஒன்று விலைக்கு வருவதாகவும் அதனை வாங்கி தர சொல்லுமாறு எனது கணவர் என்னிடம் பெற்றோர்களிடம் சொல்லி வற்புருத்தினார். அதற்கு திருமணமாகி ஒரு மாதம் கூட ஆகவில்லை திருமணத்திற்கு பெறும் செலவு செய்து விட்டார்கள் அதனால் அப்போது அவர்களால் கொடுக்க இயலாது என்று நான் எனது கணவரிடம் சொன்னேன். அதற்கு 2 வது திருமணம் தானே உனது பெற்றோர் 100 பவுன் நகை போடுவதாகவும், 10 லட்சம் ரூபாய் கொடுப்பதாகவும் சொல்லிவிட்டு 71

பவுன் நகைகளையும் 4 1/2 லட்சம் பணம் தான் கொடுத்தார்கள். ஆகையால் இங்கு வாழ வேண்டும் என்றால் உன் பெற்றோர்களிடம் சொல்லி வீட்டை வாங்கி தர சொல் இல்லை என்றால் பணம் 5 1/2 லட்சம் பணம் வாங்கி வா என்று சொல்லி எனது பெற்றோர் வீட்டிற்கு என்னை அனுப்பி வைத்தார்கள். நான் பெற்றோரிடம் சொல்லி உறவினர்களை வைத்து சமாதானம் பேசி சேர்ந்து வாழ அனுப்பி வைத்தார்கள். ஆனால் எனது மாமியார் அவமானமாக என்னை பேசி திட்டி எனது மணம் புன்படும்படி நடத்தினார். 3 மாதம் கழித்து எனது கணவர் வெளிநாடு செல்வதாகவும் அவர் திரும்பி வரும் வரை அவரது பெற்றோர் வீட்டில் குடியிருக்குமாறு சொன்னார். நான் என் மாமியார் வசம் இருந்த என்னுடைய நகைகளை கேட்டதற்கு உன்னுடைய பெற்றோர்கள் நகையை தர மாட்டார்கள் இங்கு வரும் போது போட்டு கொள்ளலாம் என்று நகையை தராமல் வைத்து கொண்டார்கள். அதன் பின் நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டேன். திருவிழாவின் போது மட்டும் தான் எனது கணவர் வீட்டிற்கு போவேன். அப்படி செல்லும் போது எனது மாமியார், கொழுந்தனார், நாத்தனார் வரதட்சனையாக நகையும், பணமும் கேட்டு என்னை துன்புறுத்தினார்கள். எனது கணவர் போனில் நகை பணம் கேட்பார் நான் வாங்கி தரவில்லை என்ற காரணத்தால் என்னுடன் 3 மாதங்கள் பேசவில்லை, நான் போன் செய்தாலும் அவர் எடுக்கவில்லை. அதன் பிறகு 09.01.2017 காலை 8.00 மணிக்கு எனது கணவர் சௌதியில் இருந்து காரைக்குடிக்கு வந்து விட்டதாக தெரிந்து கொண்டு அவர் வீட்டிற்கு சென்ற போது எனது கணவர், எனது மாமியார், கொழுந்தனார், நாத்தனார் ஆகியோர்கள் எங்களை வீட்டிற்குள்ளே விடாமல் பேசிக்கொண்டே வரதட்சனை பணம் கொண்டு வந்தால் உள்ளே வா, இல்லை என்றால் வெளியே போயிவிடு என்று கீழ் நோக்கிய வார்த்தைகளால் என்னையும், எனது அம்மாவையும் திட்டி வரதட்சனை கொடுக்க வக்கில்லாத உணக்கு எதுக்கு வாழ்கை என்று பேசி விரட்டிவிட்டார்கள்.

23.01.2017 அன்று மேற்படி எனது கணவர் மற்றும் அவர் குடும்பத்தார் மீது புகார் கொடுப்பதற்காக காரைக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்ற போது எனது கணவர் தனி வீடு எடுத்து தனி குடித்தனம் நடத்த இருப்பதாக எனது கணவர் காவலர்களிடம் சொன்னார் இந்த நிலையில் நான் காவலர்கள் அறிவுறுத்தலின் பேரில் எனது கணவருடன் சென்று குடும்பம் நடத்தினேன். அதன் பிறகு நான் கர்ப்பம் ஆகி விட்டேன் பின்னர் எனது கணவருடன் குடித்தனம் நடத்தி கொண்டிருந்த போது அவர் என்னுடைய மாமியார் வீட்டிற்கு சென்று வந்தார். அங்கு சென்று விட்டு என்னை பார்க்க வரும் போது மேலும் நகைகள் மற்றும் பணம் கேட்டு சண்டையிட்டார். எனது உறவினர் திருமண நிகழ்விற்கு செல்வதற்காக எனது கணவரிடம் எனது நகைகளை மாமியாரிடம் இருந்து கொண்டு வர சொல்லுமாறு கேட்டேன் ஆனால் அவர் அவ்வாறு கொண்டு வரவில்லை. அதன் பிறகு எனது அம்மாவிடம் உறவினர் வீட்டில் திருமண நிகழ்விற்கு செல்ல இருப்பதாக சொன்னேன், அவர்கள் எனக்கு எனது சின்னம்மா மகளின் 30 பவுன் நகையை வாங்கி கொடுத்து திருமணத்திற்கு போட்டு கொண்டு போகும் படி கொடுத்தார்கள். நான் அதனை பெற்று கொண்டேன். திருமணம் முடிந்து கொடுக்கலாம் என்று 30 பவுன் நகைகளையும் எனது பீரோவில் கழட்டி வைத்திருந்தேன். அதனை எனது கணவர் என்னுடைய சம்மதம் இன்றி 30 பவுன் நகைகளை எடுத்து சென்று விட்டார். இது குறித்து எனது கணவரிடம் கேட்டதற்கு நான் எடுக்கவில்லை என்று என்னிடம் பொய் சொன்னார். என்னை வீட்டை விட்டு

வெளியே செல்லுமாறு துன்புறுத்தினார். நான் கர்ப்பிணியாக இருந்த போதிலும் எனது கணவர் அதை கண்டுகொள்ளலாம் என்னை அடித்து விட்டை விட்டு வெளியே விரட்டினார். மேலும் என்னுடைய கணவர் மற்றும் கொழுந்தனார் இருவரும் என்னை கீழ் நோக்கியவார்த்தைகளால் திட்டி கொலை செய்து விடுவதாக மிரட்டி கொடுமைபடுத்தினார்கள். ஆகையால் நான் மனதளவில் என்னை துன்புறுதிய எனது கணவர், மாமியார், கொழுந்தனார், நாத்தனார் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு காரைக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நடந்த விவரங்களை சொல்லி புகார் அளித்தேன். **புகார் அ.சா.ஆ.1**. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை இல்லை</u>

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.12.10 09:55:25 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.